ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2369/04 – 2024 ජනවාරි මස 29 වැනි සඳුදා – 2024.01.29
2369/04 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவில்541- கல்கிஸ்ஸ கிராம அலுவலர் பிரிவில் கல்கிஸ்ஸ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. CO/RTM/2019/149 மற்றும் 2019.11.21 ஆம் திகதியிடப்பட்ட மேம்படுத்தப்பட்ட வரைபடப் படியெடுப்பில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க் காணப்படும் பெயர்கள் மற்றும் விஸ்தீரணங்களையுடைய காணித்துண்டுகளின் எல்லைகள்:

*01.* **துண்டு 'A' - கல்கிஸ்ஸ தோட்டம் வரி மதிப்பீட்டு இல. 37/2, ஸ்ரீ தர்மபால மாவத்தை - விஸ்தீரணம்: 0.0532 ஹெக்டயார்**

வடக்கு: திரு. எம். ஈ. எம். ஏ. ஹுசைன் உரிமை கோருகின்ற கல்கிஸ்ஸ தோட்டக் காணி மற்றும் வீதி; கிழக்கு: வீதி மற்றும் துண்டு B; தெற்கு : துண்டு B மற்றும் கடலோர புகையிரத வீதி; மேற்கு: கடலோர புகையிரத வீதி மற்றும் திரு. எம். ஈ. எம். ஏ. ஹுசைன் உரிமை கோருகின்ற கல்கிஸ்ஸ தோட்டக் காணி.

*02.* **துண்டு 'B' - கல்கிஸ்ஸ தோட்டம் வரி மதிப்பீட்டு இல. 37/3, ஸ்ரீ தர்மபால மாவத்தை - விஸ்தீரணம்: 0.0531 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு A மற்றும் வீதி ; கிழக்கு : வீதி மற்றும் சங்கமித்தா பாதை; தெற்கு: சங்கமித்தா பாதை மற்றும் கடலோர புகையிரத வீதி; மேற்கு: கடலோர புகையிரத வீதி மற்றும் துண்டு A.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/ 9/ 2018/ WS/217.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", சுாணிச் செயலகம்,
இல.1200/6,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர் 10.

EOG 01 - 0221